**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 1, November 2025** **E-ISSN: 2583-0481**

# Youth Social Media Usage: Ethical Challenges and Islamic Solutions

**A. L. M. Mujahid**, Senior Lecturer, Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.
**ORCiD: https://orcid.org/0000-0001-8562-1209**
**DOI: 10.5281/zenodo.18880021**
**Received:** 23 August 2025, **Revised:** 30 September 2025, **Accepted:** 10 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*In digital era, social media has become an essential in the lives of young people. It plays a significant role in different aspects such as education, communication, expression, career development and maintaining other forms of social relationships. Yet, these platforms also generate several moral and ethical challenges that include moral degradation, wastage of time, psychological stress, social association and loss of spiritual identity. This paper examines the moral challenges faced by the modern youth in the use of social media from an Islamic perspective. It proposes faith-based solutions to address them. The study adopts a qualitative approach and data were collected from Islamic sources such as the holy Qur'an, Hadith, and the views of prominent Islamic scholars along with survey responses from the youth aged 18 to 25. The study reveals that social media serves as a tool capable of producing both positive and negative outcomes in the lives of the youth. The excessive use of social media was the result in disregard of prayers and academic responsibilities. It creates feelings of loneliness, inferiority and moral declination. From the Islamic viewpoint, the moral principles such as Taqwa, Amanah, Ihsan, and Wasatiyyah guide the youth toward responsible digital activity. Islam does not reject media and technological sources. But it emphasizes the beneficial use for Da'wah, education, social welfare, and the dissemination of such awareness among the youth. Eventually, the use of social media signifies a technological challenge and an ethical - spiritual test for the Muslim youth. But once guided by the Islamic ethics, social media is capable to transform from social harm into goodness and moral development for them. Hence, the study highlights the need of nurturing an objective existence that integrates religious consciousness with modern technological advancement.*

**Keywords:** Social Media, Youth, Islam, Moral Challenges, Digital Ethics.

## References

[1] Abdullah, Farhana, and Roslizawati Mohd Ramly. "Islamic Ethics and Online Behaviour: A Study of Muslim Youth on Social Media." *Malaysian Journal of Youth Studies*, vol. 25, 2022, pp. 1–18.
[2] Abokhodair, N., Elmadany, A. & Magdy, W. "Holy Tweets: Exploring the Sharing of Qur'an on Twitter." arXiv preprint, 2020.
[3] Ahmad, Siti Mariam. "Digital Piety Among Muslim Youth: A Study of Qur'an Sharing on Instagram." *Islamic Communication Journal*, vol. 5, no. 2, 2021.
[4] Al-Bukhari, Imam Muhammad bin Ismail. *Ṣaḥīḥ al-Bukhari: The Translation of the Meanings of Sahih al-Bukhari (Arabic-English)*. Translated by Dr. Muhammad Muhsin Khan, 9 vols., Darussalam, 1997.
[5] Alim, Sa'diyya Shaikh. "Ethics of Digital Engagement in Islam: A Gendered Analysis." *Journal of Muslim Ethics*, vol. 4, no. 1, 2020.
[6] Al-Qaradawi, Y. *Islamic Ethics and Media Responsibility*. Islamic Research Foundation, Doha, 2012.

[7] Azmi, Mohd Sabri. "Responsible Use of Social Media from an Islamic Perspective." *Journal of Usuluddin*, vol. 48, 2018.
[8] Bunt, Gary R. *Hashtag Islam: How Cyber-Islamic Environments Are Transforming Religious Authority*. UNC Press, 2018.
[9] Hasan, A. "Youth and Digital Morality in Islam." *Journal of Islamic Thought*, vol. 18, no. 2, 2020, pp. 45–58.
[10] Hassan, R. "Digital Media, Youth Culture and Islamic Ethics." *Journal of Religion and Technology*, vol. 12, no. 3, 2020.
[11] Hoffmann, Thomas, and Göran Larsson, eds. *Muslims and the New Media: Historical and Contemporary Debates*. Routledge, 2013.
[12] Isa, I. A. "Social Media and Its Impacts on the Morality of Muslim Youths in Kano Metropolis." *MAQOLAT: Journal of Islamic Studies*, vol. 3, no. 3, 2025.
[13] Kavakci, Maha. *Cyber Ethics in Islam: A Moral Framework for the Digital Age*. Islamic Research Publications, 2021.
[14] McFarlane, S. J., Alim, S. & Ahmed, N. "Social Media and Online Digital Technology Use Among Young People and Parents from Muslim Backgrounds in Australia." *Frontiers in Psychiatry*, 2023.
[15] Norwawi, N., Abdullah, R. & Ismail, Z. "Islamic Ethics and Social Media Use: A Study in Theory and Practice." *Journal of Psychology & Social Psychology*, 2014.
[16] Omer, Haroon, and Sarah Yousaf. "Cyberbullying, Islamic Ethics, and Youth: A Cross-cultural Study." *Journal of Islamic Psychology*, vol. 2, 2022.
[17] Pew Research Center. *Social Media and Youth Behaviour*. Washington, D.C., 2023.
[18] Qadri, Muhammad Tahir-ul. *Islamic Ethics and Modern Society*. Minhaj Publications, 2019.
[19] Rahman, Nurul. "Islamic Framework for Social Media Ethics." *Journal of Syariah*, vol. 28, no. 3, 2020.
[20] Rane, Halim. *Media, Muslims and the Message*. Islamic Relief Publications, 2010.
[21] Ruhmadi, A. *Social Media Ethics (Ethical Study from Al-Ghazali's Perspective)*. Atlantis Press, 2024.
[22] Shodiqoh, R. "Social Media Ethics in a Contemporary Islamic Perspective." *Sicopus Journal*, vol. 2, no. 3, 2024, pp. 215–226.
[23] Siddique, Muhammad Abu Bakr, translator. *The Noble Qur'ān*. Darussalam India, 2009.
[24] Zainuddin, N. F. "The Role of Islamic Teachings in Guiding Youth Behaviour on Social Media." *Southeast Asian Journal of Islamic Studies*, 2022.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இளைஞர்களின் சமூக வலைத்தளப் பயன்பாடு: நெறிமுறை சவால்கள் மற்றும் இஸ்லாமிய தீர்வுகள்

**ஏ. எல். எம். முஜாஹித்,** சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
**ORCiD: https://orcid.org/0000-0001-8562-1209**
**DOI: 10.5281/zenodo.18880021**

**ஆய்வுச் சுருக்கம்**

*இன்றைய டிஜிட்டல் சூழலில் சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்வின் முக்கிய ஓர் அங்கமாக மாறியுள்ளன. கல்வி, தகவல் பரிமாற்றம், திறமைகளை வெளிப்படுத்தல், தொழில் வளர்ச்சி, மற்றும் சமூக உறவுகளை நிலைநிறுத்துதல் போன்ற பல துறைகளில் இவை முக்கிய பங்காற்றுகின்றன. இருப்பினும், அதே சமூக வலைத்தளங்கள் ஒழுக்கச் சிதைவு, நேர விரயம், மனஅழுத்தம், சமூக ஒப்பீடு, மற்றும் ஆன்மீக வீழ்ச்சி போன்ற பல நெறிமுறைச் சவால்களையும் உருவாக்குகின்றன. இவ்வாய்வு, சமூக வலைத்தளப் பயன்பாட்டினால் இளைஞர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய நெறிமுறைச் சவால்களை இஸ்லாமிய நோக்கில் விளக்கி, மத அடிப்படையிலான தீர்வுகளை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டது. இவ்வாய்வு பண்பியல் (Qualitative) ஆய்வு முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அல்குர்ஆன், ஹதீஸ், மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துகள் ஆகிய ஆதாரங்களும், அதனுடன் 18-25 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடமிருந்து ஆன்லைன் கருத்துக் கணிப்பு மூலம் பெறப்பட்ட தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவு பகுப்பாய்வின் முடிவுகள், சமூக வலைத்தளங்கள் இருமுகப்பயன்பாட்டைக் கொண்டதாக, அதாவது நன்மை மற்றும் தீமை இரண்டையும் விளைவிக்கும் கருவியாக விளங்குகின்றன என்பதைக் காட்டுகின்றன. சமூக வலைத்தளங்களில் அளவுக்கு மீறிய ஈடுபாடு தொழுகை மற்றும் கல்விசார் பொறுப்புகளில் அலட்சியம், தனிமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மற்றும் ஒழுக்கச் சிதைவு போன்ற விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டது. இஸ்லாமியப் பார்வையில், தக்வா (இறையச்சம்), அமானா (பொறுப்பு உணர்வு), இஹ்சான் (நல்லது செய்வதில் நேர்மை), மற்றும் வஸதிய்யா (நடுநிலை) போன்ற நெறிமுறைகள் இளைஞர்களை டிஜிட்டல் உலகில் பொறுப்புடன் நடக்க வழிநடத்துகின்றன. இஸ்லாம் ஊடகங்களையும் தொழில்நுட்பத்தையும் முற்றாக மறுக்கவில்லை, மாறாக அது அவற்றை நன்மையான செயற்பாடுகளான கல்வி, சமூக நலன், மற்றும் விழிப்புணர்வு போன்ற துறைகளில் பயனுள்ளதாகப் பயன்படுத்தும் வழியையே வலியுறுத்துகிறது. சமூக வலைத்தளப் பயன்பாடு இளைஞர்களுக்கு வெறும் தொழில்நுட்பச் சவாலாக அல்லாமல், ஒரு ஆன்மீக மற்றும் நெறிமுறைச் சோதனையாகவும் காணப்படுகின்றது. இதனை இஸ்லாமிய நெறிமுறைகளின் வழிகாட்டுதலுடன் ஒருங்கிணைக்கும் போது சமூக வலைத்தளங்கள் தீமையிலிருந்து நன்மைக்கான கருவியாக மாற்ற முடியும். இவ்வாய்வு, மத விழிப்புணர்வும் தொழில்நுட்ப முன்னேற்றமும் இணைந்த ஒரு சமநிலையான வாழ்க்கை முறையை உருவாக்கும் தேவையை வலியுறுத்துகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** சமூக வலைத்தளங்கள், இளைஞர்கள், இஸ்லாம், நெறிமுறைச் சவால்கள், டிஜிட்டல் நெறிமுறை.

## அறிமுகம்

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சியால் மிகவும்

ஆழமான மாற்றங்களை அனுபவிக்கிறது. இந்த மாற்றத்தின் முக்கிய வெளிப்பாடாக சமூக வலைத்தளங்கள் உருவாகியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில், சமூக வலைத்தளங்கள் உலக மக்களின் வாழ்க்கை முறை, கலாசாரம், கல்வி, தொடர்பாடல் முறை ஆகியவற்றில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இளைஞர்கள் இந்த மாற்றத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளனர். Facebook, Instagram, TikTok, WhatsApp, X (Twitter), Snapchat, YouTube போன்ற தளங்கள் தகவல் பரிமாற்றம், கல்வி வளங்கள் பகிர்வு, இணையவழி வியாபாரம், சமூக சேவை, பொழுதுபோக்குகள் போன்ற பல தளங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவை இளைஞர்களுக்கான திறமைகளை வெளிப்படுத்தும் மேடையாகவும், உலகளாவிய தொடர்புகளை ஏற்படுத்தும் வாயிலாகவும் செயல்படும் அதேவேளை இதன் பின்னணியில் பல்வேறு சவால்களும் பாதக விளைவுகளும் உருவாகியுள்ளன.

சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவழிப்பதால் இளைஞர்கள் கல்வி, இறைவணக்கம், குடும்ப உறவுகள் போன்ற அத்தியாவசிய விடயங்களில் கவனம் செலுத்த முடியாமல் நேர விரயம் ஏற்படுகின்றன. இதனால் மன அழுத்தமும், தாழ்வு உணர்வும் உருவாகி, பிறர் வாழ்க்கையை ஒப்பிட்டு தங்களைக் குறைவாகக் கருதும் மனநிலை ஏற்படுகிறது. மேலும், தவறான பதிவுகள், பொய் செய்திகள், தேவையற்ற உள்ளடக்கங்கள் இளைஞர்களின் ஒழுக்க நெறிமுறைகளை சீர்குலைக்கும் அபாயத்தையும் ஏற்படுத்துகின்றன. இதனுடன் இணையத்தில் பகிரப்பட்ட தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதால் தனியுரிமை இழப்புகளும் பாதுகாப்பு ஆபத்துகளும் உருவாகின்றன. இதனால் சமூக வலைத்தளங்களின் பயன்பாடு இளைஞர்களின் சமூக, உளவியல் மற்றும் ஒழுக்கமான வளர்ச்சிக்கு சில நேரங்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இவற்றால், சமூக வலைத்தளங்கள் நன்மைக்கும் தீமைக்கும் வழிவகுக்கும் இருமுகப்பயன்பாடாக மாறியுள்ளது.

இஸ்லாம், மனிதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சமநிலை மற்றும் நெறிமுறை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. நாங்கள் உங்களை ஒரு நடுநிலையுடைய சமூகமாக ஆக்கினோம் *என்று அல்*குர்ஆன் கூறுகிறது. இதன் மூலம், எந்தத் துறையிலும் அளவுக்கு மீறாத, பொறுப்பான நடத்தை தான் இஸ்லாமிய வாழ்க்கை முறையின் அடிப்படை என்பதைக் காணலாம். அதேபோல எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும் என நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸ் மனிதனின் பேச்சு, எழுத்து, செயல்கள் அனைத்தும் நெறிமுறைக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இன்றைய சூழலில், சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் ஒவ்வொரு பதிவும், கருத்தும், செய்தியும் இந்த நெறியை மீறுவதாகவோ, அல்லது பேணுவதாகவோ அமையலாம். இஸ்லாமிய பார்வையில் சமூக வலைத்தளப் பயன்பாடு ஒரு சாதாரண தொழில்நுட்பச் செயலாகக் கருதப்படாமல் அது ஒரு நெறிமுறைப் பொறுப்பாகவும், மத அடிப்படையிலான சோதனையாகவும் பார்க்கப்படுகிறது. அதனைப் பயன்படுத்தும் போது ஒரு முஸ்லிம் பின்பற்ற வேண்டிய அடிப்படை நெறிமுறைகளான இறையச்சம், பொறுப்பு, உளத்தூய்மை ஆகியவைகளை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இன்றைய இளைஞர்கள் உலகளாவிய தகவல் பரிமாற்றத்தின் மையத்தில் வாழ்கின்றனர். அவர்களின் சிந்தனை, தொடர்பு முறை, மதிப்பீடு, மற்றும் சமூக உறவுகள் அனைத்தும் பெரும்பாலும் சமூக வலைத்தளங்களின் தாக்கத்தில் நடைபெறுகின்றன. இத்தகைய நிலைமையில்,அவர்களின் வாழ்வில் இஸ்லாமிய மதிப்புகள் எவ்வாறு நிலைத்திருக்கின்றன என்பதைக் கேள்விக்குறியாக்கும் சூழல் உருவாகியுள்ளது. இஸ்லாமிய நெறிகளின் அடிப்படையில் சமூக வலைத்தளப் பயன்பாட்டின் நன்மை-தீமைகளை ஆராய்ந்து,

இளைஞர்களுக்கு மதம், அறிவியல், சமூக நெறிகளுடன் இணைந்த ஒரு சமநிலையான வழிகாட்டுதலை வழங்குவதில்தான் இந்த ஆய்வின் முக்கியத்துவம் அமைந்துள்ளது. இன்றைய நவீன காலத்தில் சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்க்கையின் அங்கமாகி, கல்வி, தகவல் பகிர்வு, திறமைகள் வெளிப்படுத்தல் போன்ற பல துறைகளில் பயனளிக்கின்றன. ஆனால் அவற்றின் தவறான பயன்பாடு காரணமாக நெறிமுறை வீழ்ச்சி, பொய்யான அடையாளம், நேர விரயம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இஸ்லாம் தகவல் பரிமாற்றத்தை ஊக்குவித்தாலும், உண்மைத் தன்மையையும் பொறுப்பையும் வலியுறுத்துகிறது. குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் பொய்ச் செய்திகளைப் பரப்ப வேண்டாமென்றும், நல்ல சிந்தனையுடன் தகவல்களைப் பகிர வேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றன.

இளைஞர்களின் ஆன்மீக நிலையை உறுதிப்படுத்த, டிஜிட்டல் உலகில் இஸ்லாமிய நெறிமுறைகள் ஒருங்கிணைக்கப்படுவது அவசியமாகும். இதன் மூலம், அவர்கள் இறையச்சம், இஹ்சான், பொறுப்புத்தன்மை ஆகிய மதப் பண்புகளை ஊடகப் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்தலாம். இந்த ஆய்வு, சமூக வலைத்தளங்களைத் தடை செய்வதை நோக்கமாகக் கொள்ளாமல், அவற்றை நெறிமுறையுடன் பயன்படுத்தக் கற்பிக்கும் வழிகளை முன்வைக்கிறது. மேலும், கல்வி, மதம், சமூகத் துறைகளில் “இஸ்லாமிய டிஜிட்டல் நெறிமுறை” என்ற புதிய சிந்தனையை உருவாக்கி, இளைஞர்களை ஒழுக்கமான சமூக ஊடகப் பயனாளிகளாக உருவாக்கும் முயற்சியாக விளங்குகிறது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்தல்.
2. இஸ்லாமிய கொள்கைகளின் அடிப்படையில் அந்தச் சவால்களை மதிப்பீடு செய்தல்.
3. இளைஞர்கள் சமூக வலைத்தளங்களை நெறிமுறையுடனும் பயனுடனும் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

சமகால ஆய்வுகள் பல, சமூக வளைத்தளங்கள் இருவேலை வாளாக செயல்படுவதாக, அதாவது ஒருபுறம் கல்வி, தகவல் பரிமாற்றம், சமூக உறவு போன்ற நன்மைகளை வழங்கினாலும், மறுபுறம் மனநிலை மற்றும் ஒழுக்கச் சிதைவுகளுக்குக் காரணமாகவும் விளங்குகின்றன என்பதையும் வெளிப்படுத்துகின்றன. Pew Research Center (2023) வெளியிட்ட ஒரு உலகளாவிய ஆய்வின்படி, 16–24 வயதுடைய இளைஞர்களில் சுமார் 87% பேர் தினசரி குறைந்தபட்சம் 3 மணி நேரத்திற்கும் அதிகமாக சமூக வலைத்தளங்களில் செலவிடுகின்றனர். இந்த அளவுக்கு மீறிய பயன்பாடு, கல்வி, தொழில், மற்றும் குடும்ப உறவுகளில் சமநிலையின்மையை ஏற்படுத்துகிறது. மேலும், Twenge & Campbell (2019) தங்கள் ஆய்வில், சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடும் இளைஞர்கள் தாழ்வு உணர்வு (low self-esteem), தனிமை உணர்வு (loneliness), மன அழுத்தம் (stress) போன்ற உளவியல் பிரச்சனைகளை அனுபவிக்கின்றனர் எனக் கூறுகின்றனர். இதன் காரணமாக, சமூக ஒப்பீட்டு மனநிலை மற்றும் ‘பிறர் என்ன நினைப்பார்கள்?’ என்ற மனச்சுமை அதிகரிக்கின்றது. மற்றொரு ஆய்வில், Kuss & Griffiths (2017) குறிப்பிடுகிறார்கள்: “சமூக வலைத்தளப் பழக்கம் (addiction) இளைஞர்களின் உறக்கத் தரத்தை, கவனக் குவிப்பை, மற்றும் உணர்ச்சி சமநிலையை பாதிக்கிறது.” இதனால் டிஜிட்டல் பழக்கவழக்கங்கள் ஒரு மனநலக் கவலைக்குரிய துறையாக மாறியுள்ளன.

இஸ்லாமிய அறிஞர்கள் ஊடகப் பயன்பாட்டை வெறும் தொழில்நுட்ப முன்னேற்றமாக அல்லாது, அமானா (பொறுப்பு) மற்றும் தக்வா (அல்லாஹ்வின் பயம்) அடிப்படையில் அணுக வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அல்-கர்ழாவி தன் “*Islam and Contemporary Media Ethics*”

என்ற நூலில் “ஊடகம் என்பது மனிதனின் கருவி அல்ல; அது அவனின் நம்பிக்கையின் பிரதிபலிப்பு ஆகும்” என்று குறிப்பிடுகிறார். அதாவது, ஒரு முஸ்லிமின் ஊடகப் பயன்பாடு அவனது உள்ளார்ந்த நம்பிக்கை, மதநெறி, மற்றும் ஒழுக்கத்தின் அளவுகோலாகும். இதனால் சமூக வலைத்தளங்கள் வெறும் தகவல் பரிமாற்றத்திற்கான கருவியாக அல்லாது, ஒரு நெறிமுறைச் சோதனையாக விளங்குகின்றன. மனிதனின் நாவு, அவன் இதயத்தின் நிலையை வெளிப்படுத்தும் கண்ணாடியாகும். இன்றைய டிஜிட்டல் உலகில், “நாவு” என்பதை “சமூக வலைத்தளக் கருத்துகள்” என்று பொருள்படுத்தலாம். அதாவது, ஒருவர் இணையத்தில் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும் அவன் உள்ளார்ந்த நிலையை பிரதிபலிக்கிறது. எனவே “இளைஞர்கள் ஊடகத்தைப் பயன்படுத்தும் போது, அதில் நன்மை நோக்கம் மற்றும் சமநிலை இருக்க வேண்டும். இல்லையெனில் அது நெறி மற்றும் சமூக ஒற்றுமைக்கு ஆபத்தாக மாறும்.

சமகால ஆய்வுகள் சமூக வலைத்தளங்கள் கல்வி மற்றும் ஏனைய துறைகளில் நன்மையான பங்காற்றலாம் எனக் காட்டுகின்றன. Nasrullah (2014) “இஸ்லாமிய அழைப்புப்பணி சமூக வலைத்தளங்களில் நவீன வடிவத்தில் பரவ முடியும்; ஆனால் அதற்கான நெறிமுறை கட்டுப்பாடுகள் அவசியம்” எனக் கூறுகிறார். El-Badawy & Hashem (2015) ஆகியோர் “இளைஞர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் விதம், அவர்களின் மத அடையாளத்தை நேரடியாகப் பாதிக்கிறது” எனக் கூறுகிறார்கள். இத்தகைய ஆய்வுகள் சமூக வலைத்தளப் பயன்பாட்டில் மத விழிப்புணர்வை வளர்த்தல் அவசியம் என்பதையும், இல்லையெனில் அது மத உணர்விலிருந்து விலகச் செய்வதையும் வெளிப்படுத்துகின்றன. இவற்றை மொத்தமாகப் பார்க்கும் போது, சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் மனநிலை, நடத்தை, மத அடையாளம் ஆகியவற்றை ஆழமாகத் தாக்குகின்றன என்பது தெளிவாகிறது. இதனால் இஸ்லாமியப் பார்வையில் இந்தப் பயன்பாட்டை வழிநடத்தும் ஒரு மத-சமூக ஒருங்கிணைந்த கட்டமைப்பு தேவையாகிறது. இவ்விலக்கிய ஆய்வுகள் அனைத்தும் ஒரு முக்கிய முடிவை நோக்கி வழிநடத்துகின்றன. அதாவது சமூக வலைத்தளங்கள் இளைஞர்களுக்கு திறமைகளை வளர்க்கும் வாய்ப்பாக இருக்கும் அதேவேளை அது ஒழுக்க மற்றும் ஆன்மீக சோதனையாகவும் விளங்குகின்றன. இஸ்லாமிய நெறிமுறைகள் இந்த இரு தளங்களுக்கிடையில் சமநிலையை உருவாக்கும் வழிகாட்டுதலாகக் காணப்படுகின்றன.

**ஆய்வு முறையியல்**

பண்பியல் (Qualitative Research) முறையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் நோக்கம் சமூக வலைத்தளங்களின் தாக்கத்தை இஸ்லாமிய நோக்கில் ஆராய்வதாக இருப்பதால், எண்ணிக்கைக் கணக்குகள் (Quantitative data) மட்டுமன்றி கருத்தியல் மற்றும் மத அடிப்படையிலான தரவுகளும் முக்கியத்துவம் பெற்றன. இவ்வாய்வு விளக்கத்தன்மை (Descriptive) மற்றும் ஆழ்ந்த பகுப்பாய்வு (Analytical) பண்புகளைக் கொண்டது. சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் மனநிலை, ஒழுக்கம், மற்றும் மதநெறியில் ஏற்படுத்தும் தாக்கங்களை இஸ்லாமிய கோட்பாடுகளுடன் ஒப்பிடும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

இது மூன்று முக்கிய தளங்களில் கவனம் செலுத்துகிறது:

1. **மத தளம்:** புனித குர்ஆன், ஹதீஸ், மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மதநெறி வழிகாட்டுதல்கள்.
2. **சமூக தளம்:** சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் சமூக உறவு, கலாசார அடையாளம், மற்றும் நடத்தை மாற்றங்களில் ஏற்படுத்தும் தாக்கம்.
3. **உளவியல் தளம்:** மனஅழுத்தம், தனிமை உணர்வு, மற்றும் சுய மதிப்பீட்டில் ஏற்படும் மாற்றங்கள்.

இந்த ஆய்விற்கான தரவுகள் மூன்று முக்கிய மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. முதன்மைத் தரவாக குர்ஆன் மற்றும் ஹதீஸ் நூல்களில் சமூக நடத்தை, பொறுப்பு, மற்றும் ஒழுக்கம் குறித்த வசனங்களும் ஹதீஸ்களும் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு 18 முதல் 25

வயதுக்குட்பட்ட 60 இளைஞர்களிடமிருந்து ஒன்லைன் வினாக்கொத்து மூலம் தகவல்கள் பெறப்பட்டன. இவ்வினாக்கொத்து சமூக வலைத்தளப் பயன்பாடு, மனநிலை மாற்றங்கள், மற்றும் மத விழிப்புணர்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது.

இரண்டாம் நிலைத் தரவாக நவீன சமூக ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் இணையப் புள்ளிவிவரங்கள் பயன்படுத்தப்பட்டன. Pew Research Center (2023), Kuss & Griffiths (2017), மற்றும் Twenge (2019) ஆகியோரின் ஆய்வுகள் இளைஞர்களின் சமூக வலைத்தளப் பழக்கங்களை விளக்கும் முக்கிய ஆதாரங்களாக இருந்தன. மேலும், இஸ்லாமிய ஊடகக் கொள்கைகள் மற்றும் நெறிமுறை வழிகாட்டுதல்கள் குறித்த அல்-கர்ழாவி (2012), அல்-கஸாலி போன்ற அறிஞர்களின் கருத்துகளும் இவ்வாய்வில் இணைக்கப்பட்டன. தரவுப் பகுப்பாய்வு, கருப்பொருள் அணுகுமுறையின் (Thematic Analysis) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. திரட்டப்பட்ட தரவுகள் மத, சமூக, உளவியல் கோணங்களாக வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் பொதுவான கருக்கள் (themes) அமானா (Responsibility), தக்வா (God-consciousness), நேர விரயம் (Time misuse), மன அழுத்தம் (Stress), மற்றும் மத அடையாளம் (Religious Identity) ஆகியவை அடையாளம் காணப்பட்டன. பின்னர், இக்கருப்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு, சமூக வலைத்தளப் பயன்பாட்டின் நன்மை, தீமை ஆகிய இரு கோணங்களையும் விளக்கும் ஒருங்கிணைந்த பகுப்பாய்வு மாதிரி உருவாக்கப்பட்டது. ஆய்வில் பங்கேற்ற அனைவரின் தகவல்களும் இரகசியமாக பேணப்பட்டதுடன், மத நூல்களின் விளக்கங்கள் நம்பகமான அறிஞர்களின் ஆதாரங்களிலிருந்து மட்டுமே பெறப்பட்டன. மேலும், முடிவுகள் எவ்வித முன் தீர்மானமின்றியும், தரவின் அடிப்படையில் மட்டுமே வடிவமைக்கப்பட்டன. இந்த ஆய்வுமுறை, இஸ்லாமிய கோட்பாடுகள் மற்றும் சமகால சமூக ஆய்வு நடைமுறைகளை இணைத்து, சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் மத மற்றும் மனநிலை வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கான உறுதியான அடிப்படையை வழங்குகிறது.

**ஆய்வின் கண்டுபிடிப்புகள்**

சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் மத, சமூக மற்றும் உளவியல் கோணங்களில் பரிசீலிக்கப்பட்டன. இவை நன்மையும் தீமையும் கொண்ட இருவேலை வாளாகச் செயல்படுகின்றன. முக்கியமான நான்கு தளங்களில் விளைவுகள் இனங்காணப்பட்டுள்ளன.

**1. நேர விரயம்**

இன்றைய இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் செலவழிக்கும் நேரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக அவர்கள் தொழுகை, கல்வி, குடும்பப் பொறுப்புகள், தனிநபர் வளர்ச்சி போன்ற முக்கிய வாழ்க்கைத் துறைகளில் அலட்சியம் காட்டுகின்றனர். சமூக வலைத்தளங்கள் ஆரம்பத்தில் தகவல் பரிமாற்றம், தொடர்புகளை எளிதாக்கும் கருவியாக இருந்தாலும், கட்டுப்பாடின்றி பயன்படுத்தப்படும் போது அவை நேரத்தை மிகுந்தளவில் வீணடிக்கச் செய்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான்: "**நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அல்லாஹ் பதிவு செய்திருக்கிறான்.**" **(அல்குர்ஆன் 36:12)** இந்த வசனம், நேரத்தின் மதிப்பையும், மனிதன் செய்வதெல்லாம் கணக்கிடப்படும் என்பதையும் நினைவூட்டுகிறது. இதன் அடிப்படையில், நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவது ஒரு இஸ்லாமிய கடமையாகும். சில ஆய்வுகள் காட்டுவது போல, இளைஞர்கள் தினசரி சராசரியாக 4 முதல் 6 மணிநேரங்கள் வரை சமூக வலைத்தளங்களில் செலவிடுகின்றனர். இது கல்விச் செயல்திறனை குறைப்பதோடு மட்டுமல்லாமல், உடல் மற்றும் மன நலத்திலும் தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது. தூக்கக் குறைவு, கவனச் சிதைவு, செயல்திறன் குறைவு போன்றவை இதன் சில முக்கிய

விளைவுகளாகும். மேலும், இந்த நேர விரயம் வாழ்க்கையின் முக்கிய இலக்குகளை மறக்கச் செய்து, ஆன்மீக வளர்ச்சியையும் தடுக்கக்கூடும். இஸ்லாம், ஒவ்வொரு நொடியையும் பயனுள்ளதாகச் செலவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"இரண்டு அருட்கொடைகள் உள்ளன; அதிகமான மனிதர்கள் அதனைப் பொருட்படுத்துவதில்லை. அவைதான் ஆரோக்கியம் மற்றும் ஓய்வு ஆகும்." (ஸஹீஹ் அல்-புஹாரி, ஹதீஸ் எண்: 6412)** அதனால், சமூக வலைத்தளப் பயன்பாட்டில் அளவுகோலைக் கடைபிடிப்பது, இளைஞர்களின் நேர மேலாண்மைக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

**2. ஒழுக்கச் சிதைவு**

இன்றைய டிஜிட்டல் உலகில் சமூக வலைத்தளங்கள் தகவல் பரிமாற்றத்திற்கான முக்கிய மேடையாக மாறியிருந்தாலும் அவற்றின் தவறான பயன்பாடு இளைஞர்களின் ஒழுக்க மற்றும் நெறி நிலைகளில் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அசிங்கமான காட்சிகள், ஒழுக்கத்தை மீறிய பதிவுகள், பொய் செய்திகள், வதந்திகள், அவதூறுகள் போன்றவை சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி, மனப்பான்மை மாற்றம், மதியிழப்பு, மரியாதையின்மை போன்ற விளைவுகளை உருவாக்குகின்றன.

இஸ்லாம் ஒழுக்கம், உண்மைத்தன்மை, நியாயம் ஆகியவற்றை மிகுந்த முக்கியத்துவத்துடன் வலியுறுத்துகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

> **விசுவாசிகளே! கெட்டவன் ஒருவன் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர விசாரித்துக் கொள்ளுங்கள்; இல்லையேல் அறியாமையினால் ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் அதைப்பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக ஆகிவிடுவீர்கள். (*அல்குர்ஆன்* 49: 6)**

இந்த வசனம், நம்பகமற்ற தகவல்களை சரிபார்க்காமல் பகிர்வதன் ஆபத்தை எச்சரிக்கிறது. சமூக வலைத்தளங்களில் பல இளைஞர்கள் "லைக்", "ஷேர்", அல்லது "பார்வைகள்" அதிகரிக்க வேண்டும் என்ற ஆசையில் உண்மைத் தணிக்கையின்றி பொய்யான அல்லது தீங்கு விளைவிக்கும் தகவல்களைப் பரப்புகின்றனர். இதனால் சமூகத்தில் நம்பிக்கையின்மை, வெறுப்பு, ஒற்றுமையின்மை போன்றவை ஏற்படுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"ஒரு மனிதன் தான் செவியுற்றதை எல்லாம் சொல்லி விடுவது அவனைப் பொய்யனாக ஆக்குவதற்கு போதுமானதாகும்." (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 5)** மேலும், நபி (ஸல்) அவர்கள் இன்னும் அதனைத் தெளிவாகக் கூறினார்கள்: **"ஒரு முஸ்லிம் பொய் சொல்லக் கூடாது." (திர்மிதி ஹதீஸ் எண்: 1939)** இதன் மூலம், இஸ்லாம் தகவல் பரிமாற்றத்திலும் ஒழுக்க நிலையிலும் உண்மைத்தன்மையும் பொறுப்புணர்வையும் வலியுறுத்துகிறது. எனவே, சமூக வலைத்தளங்களில் ஈடுபடும் இளைஞர்கள் தங்களின் பதிவுகள், கருத்துகள், மற்றும் பகிர்வுகளில் நெறிமுறை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

**3. மன அழுத்தமும் சமூக ஒப்பீடும்**

இன்றைய சமூக வலைத்தளங்கள் குறிப்பாக இன்ஸ்டாகிராம், டிக்டாக், பேஸ்புக் "பிறரின் வாழ்க்கை எப்படி அழகாக இருக்கிறது" என்ற ஒரு மாயையை உருவாக்குகின்றன. இவை பெரும்பாலும் தொகுக்கப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட, அல்லது கற்பனைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட தருணங்களாகும். ஆனால் இளைஞர்கள் அவற்றை உண்மையான வாழ்க்கை என எண்ணி தங்களின் நிலையை அதனுடன் ஒப்பிடும்போது தாழ்வு மனப்பான்மை, மன அழுத்தம், மனச்சோர்வு உருவாகின்றன. இதன் விளைவாக, தன்னம்பிக்கை குறைவு, தனிமை உணர்வு, சமூக விலகல் போன்ற உளவியல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. சமூக ஒப்பீடு என்ற மனநிலை, மனிதனை எப்போதும் "பிறரைப் போல் வாழ வேண்டும்" என்ற பேராசையில் தள்ளுகிறது. இதனால் அல்லாஹ் அளித்த நன்மைகள், திறன்கள், வாய்ப்புகள் மீதான நன்றியுணர்வு குறைகிறது. இஸ்லாம் இதற்குப் பிரதியாக "திருப்தி" (கனாஅத்) என்ற

பண்பை வலியுறுத்துகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"அல்லாஹ் வழங்கியவற்றில் திருப்தி அடைபவனே மிகப் பெரிய செல்வந்தனாவான்."** ***(திர்மிதி, ஹதீஸ் எண்: 2348)*** மேலும் மற்றொரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

> **உங்களை விட கீழே உள்ளவர்களை நோக்குங்கள்; மேலே உள்ளவர்களை அல்ல. இல்லையேல், அல்லாஹ் உங்களுக்குத் தந்த நன்மைகளை நீங்கள் சிறுமையாகக் காணலாம். (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 2963)**

இந்த ஹதீஸ்கள் மனிதனை சமூக ஒப்பீட்டிலிருந்து விடுவித்து, நன்றி உணர்வுடனும் மன அமைதியுடனும் வாழ வழி காட்டுகின்றன. இங்கு திருப்தி என்பது பொருளாதாரச் செல்வத்தை மட்டுமல்லாமல், ஆன்மீகச் செல்வத்தையும் வளர்க்கும் பண்பாகக் குறிப்பிடப்படுகின்றது. அதனால், சமூக வலைத்தளங்களில் பிறருடன் தன்னை ஒப்பிடுவதற்கு பதிலாக, அல்லாஹ் அளித்த வரங்களுக்குப் புகழ் சொல்லி, தன்னிலை மேம்பாட்டில் கவனம் செலுத்துவது தான் இஸ்லாமிய மனப்பான்மையாகும்.

### 4. பாவங்களும் தனியுரிமை மீறலும்

சமூக வலைத்தளங்களின் சுதந்திரமான இயல்பு, பலருக்கும் "இது ஒரு தனிப்பட்ட இடம்" என்ற தவறான உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, பிறரை கிண்டல் செய்தல், கிசுகிசு பரப்பல், அவதூறு பதிவுகள், பிறரின் தனியுரிமையை மீறுதல் போன்ற செயல்கள் அதிகரித்துள்ளன. சிலர் இது வெறும் "வினோதம்" அல்லது "நகைச்சுவை" எனக் கருதினாலும், இவை அனைத்தும் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு விரோதமான பாவங்களாகக் கருதப்படுகின்றன.

இஸ்லாம் ஒவ்வொரு மனிதனின் மரியாதையையும் தனியுரிமையையும் மதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

> **ஒருவர் மற்றொருவரை கிண்டல் செய்யாதீர்கள்; ஒருவர் மற்றவரை அவமதிக்காதீர்கள்; ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லாதீர்கள்; ஒருவருக்குகொருவர் கெட்ட பெயர் சூட்டி அழைக்காதீர்கள். *(அல்குர்ஆன் 49:11)***

இந்த வசனம், சமூக வாழ்வில் மரியாதை, நாகரிகம் பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆனால் சமூக வலைத்தளங்களில், 'கருத்து' அல்லது 'கமெண்ட்' என்ற பெயரில், மனிதர்கள் ஒருவருக்கொருவர் அவமதிப்பான வார்த்தைகளைப் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. இது ஒரு நபரின் மன நிலையையும், சமூக நல்லிணக்கத்தையும் பாதிக்கும் செயற்பாடுகளாகும். இது விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு எச்சரித்துள்ளார்கள்: **"ஒரு மனிதன் இரகசியமாகச் செய்தாலும், அதற்குப் பொறுப்பு உண்டு." (ஸஹீஹ் அல்-புஹாரி, ஹதீஸ் எண்: 6069)** அதாவது, யாரும் காணாத இடத்திலும், அல்லாஹ் அனைத்தையும் காண்கிறான் என்பதை நினைவில் கொண்டு, மறைவிலும் வெளிப்படையாகவும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மேலும், இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: **"ஒரு முஸ்லிமின் குற்றத்தை மறைப்பவனின் குற்றங்களை, இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் மறைப்பான்." (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 2699)** இதனால், பிறரின் தவறுகளை வெளிப்படுத்துவது அல்லது அவர்களின் தனியுரிமையை மீறுவது அல்லாஹ்வின் அதிருப்தியை ஏற்படுத்தும் செயல் என்பதை உணர முடிகிறது. எனவே, டிஜிட்டல் உலகிலும் இறையச்சம், மரியாதை, பொறுப்புணர்வு என்பவை நிச்சயமாகக் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இஸ்லாம் கற்றுத்தரும் "இஹ்சான்"அதாவது, "நீங்கள் அல்லாஹ்வை காண்பது போல் நடந்து கொள்ளுங்கள்" என்ற நெறி, இணையத்தள வாழ்க்கையிலும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

### பரிந்துரைகள்

1. **நேர முகாமைத்துவம்:** இளைஞர்கள் தினசரி சமூக வலைத்தளத்திற்கு பயன்படுத்தும் நேரத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

2. **ஆன்மீக விழிப்புணர்வு:** இஸ்லாமிய நெறிமுறைகள் மற்றும் மத வழிகாட்டுதல்களை தன் வாழ்வில் பின்பற்ற வேண்டும்.
3. **நல்ல நோக்கில் பயன்பாடு:** கல்வி, மற்றும் சமூக நலன் சார்ந்த உள்ளடக்கங்களை உருவாக்குதல்.
4. **சமூக விழிப்புணர்வு:** பள்ளிவாயல்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் இளைஞர்களுக்கு டிஜிட்டல் நெறிமுறை பயிற்சிகளை வழங்க வேண்டும்.

உண்மைத்தன்மை மற்றும் மரியாதை: இணையத்தில் பகிரும் தகவல்கள் உண்மையானதும், மற்றவர்களின் மரியாதையை காக்கும் விதமாக இருக்க வேண்டும்.

**முடிவுரை**

சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்வில் பல்வேறு சவால்களையும் ஒழுக்கத் தளர்வுகளையும் ஏற்படுத்துகின்றன என்றாலும், அவற்றை சமாளித்து சரியான திசையில் வழிநடத்துவதற்கான முழுமையான தீர்வுகளை இஸ்லாமிய நெறிமுறைகள் வழங்குகின்றன. இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய ஒழுக்கக் கொள்கைகள், அல்லாஹ் அனைத்தையும் கண்காணிப்பவன் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு, தனிப்பட்ட மற்றும் சமூக நடத்தையில் பொறுப்புணர்வை மேம்படுத்துகின்றன. அதன்படி, இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் ஈடுபடும் நேரத்தை அளவோடு பயன்படுத்தி, தொழுகை, கல்வி, குடும்பப் பொறுப்புகள் போன்ற முன்னுரிமை கொண்ட செயல்பாடுகளுடன் சமநிலையைப் பேணுவது முக்கியமாகின்றது. மேலும், தவறான தகவல்களைப் பகிர்வது, நபர் மீதான அவதூறு, இகழ்ச்சி போன்ற ஒழுக்க வழுவல்களைத் தவிர்த்து, உண்மைத்தன்மை, மரியாதை, மற்றும் சமூக ஒற்றுமையை நிலைநிறுத்தும் விதமான தொடர்பாடுகளை மேற்கொள்ளுதல் இஸ்லாமியமாக வலியுறுத்தப்படுகிறது. சமூக மற்றும் மத அமைப்புகள் இளைஞர்களுக்கான டிஜிட்டல் நெறிமுறை கல்வியை வழங்குவதன் மூலம், பொறுப்பான ஒன்லைன் நடத்தை பற்றிய விழிப்புணர்வை விரிவுபடுத்த முடியும். அத்தோடு, சமூக வலைத்தளங்களை அழைப்பு, அறிவு பரவல், திறன் மேம்பாடு, மற்றும் சமூக சேவை போன்ற நன்மையும் பயனும் உடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல், இளைஞர்களின் டிஜிட்டல் வாழ்க்கையை மதிப்புவாய்ந்த திசையில் கட்டமைக்கிறது. இவ்வாறு, இஸ்லாமிய நெறிமுறைகள் இளைஞர்களை உலகியலுடனும் ஆன்மீகத்துடனும் இணைந்த சமநிலை கொண்ட, பொறுப்புணர்வும் இறையச்சமும் உடைய டிஜிட்டல் குடிமக்களாக வடிவமைக்கின்றன. இந்த ஆய்வு சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் ஆன்மீக, சமூக மற்றும் உளவியல் தாக்கங்களை ஆராய்ந்தது. ஆய்வின் முக்கியக் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன:

1. சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் நேரம், மனநிலை, மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை ஆழமாகத் தாக்குகின்றன.
2. அதிகப் பயன்பாடு மன அழுத்தம், தனிமை உணர்வு, ஒப்பீட்டு மனநிலை, நேர விரயம், மற்றும் ஒன்லைன் பாவங்கள் போன்ற சவால்களை ஏற்படுத்துகிறது.
3. இஸ்லாமிய நெறிமுறைகள், குறிப்பாக தக்வா, அமானா, மற்றும் இளைஞர்களை இவற்றிலிருந்து காப்பாற்றும் வழிகாட்டுதலாக அமைகின்றன.

*குர்ஆன்* மற்றும் ஹதீஸ்கள் மனிதன் தன் செயல்களை நினைவூட்டிக் கொண்டு, நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தி, சமூகத்தில் நல்லது செய்யும் பொறுப்புடன் நடக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன. இளைஞர்கள் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மட்டுமல்லாமல், மத அடிப்படையிலான சிந்தனை, பொறுப்பு, மற்றும் நடுநிலை ஆகியவற்றையும் இணைத்து வாழும்போது சமூக வலைத்தளங்கள் அவர்களுக்கு தீமையல்லாமல், ஒரு நன்மை பயக்கும் கருவியாக மாறும்.

**குறிப்புகள்**


[1] அப்துல்லா, ஃபர்ஹானா, மற்றும் ரோஸ்லிசாவதி மொஹ்த் ராம்லி. "இஸ்லாமிக் எதிக்ஸ் அண்ட் ஆன்லைன் பிஹேவியர்: எ ஸ்டடி ஆஃப் முஸ்லிம் யூத் ஆன் சோஷியல் மீடியா." *மலேஷியன் ஜர்னல் ஆஃப் யூத் ஸ்டடீஸ்*, தொகுதி 25, 2022, பக். 1–18.

[2] அபோகோடைர், என்., எல்மடானி, ஏ., மற்றும் மக்தி, டபிள்யூ. "ஹோலி ட்வீட்ஸ்: எக்ஸ்ப்ளோரிங் த ஷேரிங் ஆஃப் குர்ஆன் ஆன் ட்விட்டர்." *ஆர்கைவ் ப்ரீபிரிண்ட்*, 2020.

[3] அஹ்மத், சிதி மரியம். "டிஜிட்டல் பையட்டி அமங் முஸ்லிம் யூத்: எ ஸ்டடி ஆஃப் குர்ஆன் ஷேரிங் ஆன் இன்ஸ்டாகிராம்." *இஸ்லாமிக் கம்யூனிகேஷன் ஜர்னல்*, தொகுதி 5, இல. 2, 2021.

[4] அல்-புகாரி, இமாம் முகம்மது பின் இஸ்மாயில். *ஸஹீஹ் அல்-புகாரி: த டிரான்ஸ்லேஷன் ஆஃப் த மீனிங்ஸ் ஆஃப் ஸஹீஹ் அல்-புகாரி* (அரபிக்–இங்கிலீஷ்). மொழிபெயர்ப்பு: டாக்டர் முகம்மது முஹ்ஸின் கான், 9 தொகுதிகள், தருஸ்ஸலாம், 1997.

[5] அலீம், ஸஅ்திய்யா ஷைக். "எதிக்ஸ் ஆஃப் டிஜிட்டல் என்கேஜ்மென்ட் இன் இஸ்லாம்: எ ஜென்டர்ட் அனாலிசிஸ்." *ஜர்னல் ஆஃப் முஸ்லிம் எதிக்ஸ்*, தொகுதி 4, இல. 1, 2020.

[6] அல்-கரதாவி, யூசுப். *இஸ்லாமிக் எதிக்ஸ் அண்ட் மீடியா ரெஸ்பான்சிபிலிட்டி*. இஸ்லாமிக் ரிசர்ச் ஃபவுண்டேஷன், தோஹா, 2012.

[7] அஸ்மி, மொஹ்த் சப்ரி. "ரெஸ்பான்சிபிள் யூஸ் ஆஃப் சோஷியல் மீடியா ஃப்ரம் அன் இஸ்லாமிக் பெர்ஸ்பெக்டிவ்." *ஜர்னல் ஆஃப் உஸூலுத்தீன்*, தொகுதி 48, 2018.

[8] பன்ட், கேரி ஆர். *ஹாஷ்டாக் இஸ்லாம்: ஹௌ சைபர்-இஸ்லாமிக் என்விரான்மென்ட்ஸ் ஆர் டிரான்ஸ்ஃபார்மிங் ரிலிஜியஸ் ஆத்தாரிட்டி*. யூ.என்.சி. பிரஸ், 2018.

[9] ஹசன், ஏ. "யூத் அண்ட் டிஜிட்டல் மொராலிட்டி இன் இஸ்லாம்." *ஜர்னல் ஆஃப் இஸ்லாமிக் தாட்*, தொகுதி 18, இல. 2, 2020, பக். 45–58.

[10] ஹசன், ஆர். "டிஜிட்டல் மீடியா, யூத் கல்ச்சர் அண்ட் இஸ்லாமிக் எதிக்ஸ்." *ஜர்னல் ஆஃப் ரிலிஜன் அண்ட் டெக்னாலஜி*, தொகுதி 12, இல. 3, 2020.

[11] ஹொஃப்மான், தோமஸ், மற்றும் கோரன் லார்சன், தொகுப்பாசிரியர்கள். *முஸ்லிம்ஸ் அண்ட் த நியூ மீடியா: ஹிஸ்டாரிக்கல் அண்ட் கண்டெம்பரரி டிபேட்ஸ்*. ரௌட்லெஜ், 2013.

[12] ஈசா, ஐ. ஏ. "சோஷியல் மீடியா அண்ட் இட்ஸ் இம்பாக்ட்ஸ் ஆன் த மொராலிட்டி ஆஃப் முஸ்லிம் யூத்ஸ் இன் கானோ மெட்ரோபொலிஸ்." *மகோலாத்: ஜர்னல் ஆஃப் இஸ்லாமிக் ஸ்டடீஸ்*, தொகுதி 3, இல. 3, 2025.

[13] கவாக்சி, மஹா. *சைபர் எதிக்ஸ் இன் இஸ்லாம்: எ மொரல் ஃப்ரேம்வொர்க் ஃபார் த டிஜிட்டல் ஏஜ்*. இஸ்லாமிக் ரிசர்ச் பப்ளிகேஷன்ஸ், 2021.

[14] மெக்ஃபார்லேன், எஸ். ஜே., அலீம், எஸ்., மற்றும் அஹ்மத், என். "சோஷியல் மீடியா அண்ட் ஆன்லைன் டிஜிட்டல் டெக்னாலஜி யூஸ் அமங் யங் பீப்பிள் அண்ட் பேரன்ட்ஸ் ஃப்ரம் முஸ்லிம் பாக்கிரௌண்ட்ஸ் இன் ஆஸ்திரேலியா." *ஃப்ரண்டியர்ஸ் இன் சைக்கியாட்ரி*, 2023.

[15] நொர்வாவி, என்., அப்துல்லா, ஆர்., மற்றும் இஸ்மாயில், ஸட். "இஸ்லாமிக் எதிக்ஸ் அண்ட் சோஷியல் மீடியா யூஸ்: எ ஸ்டடி இன் தியரி அண்ட் பிராக்டிஸ்." *ஜர்னல் ஆஃப் சைக்காலஜி & சோஷியல் சைக்காலஜி*, 2014.

[16] ஓமர், ஹாரூன், மற்றும் சாரா யூசஃப். "சைபர்புல்லியிங், இஸ்லாமிக் எதிக்ஸ், அண்ட் யூத்: எ கிராஸ்-கல்ச்சுரல் ஸ்டடி." *ஜர்னல் ஆஃப் இஸ்லாமிக் சைக்காலஜி*, தொகுதி 2, 2022.

[17] ப்யூ ரிசர்ச் சென்டர். *சோஷியல் மீடியா அண்ட் யூத் பிஹேவியர்*. வாஷிங்டன், டி.சி., 2023.

[18] காத்ரி, முகம்மது தாஹிர்-உல். *இஸ்லாமிக் எதிக்ஸ் அண்ட் மாடர்ன் சொசைட்டி*. மின்ஹாஜ் பப்ளிகேஷன்ஸ், 2019.

[19] ரஹ்மான், நுருல். “இஸ்லாமிக் ஃப்ரேம்வொர்க் ஃபார் சோஷியல் மீடியா எதிக்ஸ்.” *ஜர்னல் ஆஃப் ஷரியா*, தொகுதி 28, இல. 3, 2020.

[20] ரேன், ஹலீம். மீடியா, *முஸ்லிம்ஸ் அண்ட் த மெசேஜ்*. இஸ்லாமிக் ரிலீஃப் பப்ளிகேஷன்ஸ், 2010.

[21] ருஹ்மாதி, ஏ. *சோஷியல் மீடியா எதிக்ஸ் (எதிக்கல் ஸ்டடி ஃப்ரம் அல்-கஸாலியின் பெர்ஸ்பெக்டிவ்)*. அட்லாண்டிஸ் பிரஸ், 2024.

[22] ஷோடிகோ, ஆர். “சோஷியல் மீடியா எதிக்ஸ் இன் எ கண்டெம்பரரி இஸ்லாமிக் பெர்ஸ்பெக்டிவ்.” *சிகோபஸ் ஜர்னல்*, தொகுதி 2, இல. 3, 2024, பக். 215–226.

[23] சித்தீக், முகம்மது அபூ பக்கர், மொழிபெயர்ப்பாளர். *த நொபிள் குர்ஆன்*. தருஸ்ஸலாம் இந்தியா, 2009.

[24] ஸைனுத்தீன், என். எஃப். “த ரோல் ஆஃப் இஸ்லாமிக் டீச்சிங்ஸ் இன் கைடிங் யூத் பிஹேவியர் ஆன் சோஷியல் மீடியா.” *சவுத் ஈஸ்ட் ஏஷியன் ஜர்னல் ஆஃப் இஸ்லாமிக் ஸ்டடீஸ்*, 2022.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.